தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை), வ.,து.

மதுரை.

<u>போக்குவரத்துக் கழகம் தோற்றமும், வளர்ச்சியும்</u>

**1971–ல்** கொண்டுவரப்பட்ட கையகப்படுத்துகை சட்டத்தின்படி, தனியார் பேருந்துகள் அரசுடமையாக்கப்பட்டதின் விளைவாக பாண்டியன் போக்குவரத்துக் கழகம் (இந்நாளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்., மதுரை மண்டலம்) தோற்றுவிக்கப்பட்டு **17.01.1972** முதல் செயல்படத் துவங்கியது. சதர்ன் ரோட்வேஸ் என்ற தனியார் நிறுவனத்திடமிருந்து **346** பேருந்துகள், பணிமனைகள் மற்றும் பணியாளர்களுடன் இப்போக்குவரத்துக் கழகம் செயல்பட ஆரம்பிக்கப்பட்டது.

திறமையான நிர்வாகத்திற்கும், அதிகார பரவலுக்கும் இந்த போக்குவரத்துக் கழகம் கம்பெனிகள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டது. **01.01.1974** ல் திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் (இந்நாளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்., திருநெல்வேலி மண்டலம்) தோற்றுவிக்கப்பட்டது. இக்கழகத்திற்கு திருநெல்வேலி மாவட்டத்தில் இயக்கப்பட்ட **106** பேருந்துகளையும் மாற்றப்பட்டது. ஆதேநாளில் தனது **62** பேருந்துகளை கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்ட சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு (இந்நாளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., கும்பகோணம் மண்டலம்) வழங்கியது. இவ்வாறு வழங்கப்பட்டதற்குப் பின்னர் இக்கழகத்தின் சேவை பகுதி பிரிக்கப்படாத வருவாய் மாவட்டங்களான மதுரை மற்றும் இராமநாதவுரம் புதுக்கோட்டையுமாக இருந்தது.

இக்கழகத்தின் பேருந்துகள் **1249** ஆக உயர்ந்தபோது **01.04.1983** ல் இரண்டாகப் பிரிக்கப்பட்டு **01.04.1983** முதல் **352** பேருந்துகளை கொண்டு காரைக்குடியை தலைமையிடமாகக் கொண்ட மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகமாக (இந்நாளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., காரைக்குடி மண்டலம்) உருவாக்கப்பட்டு மதுரை – அருப்புக்கோட்டை சாலையின் கிழக்குப்பகுதி, பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தையும் சேவைப் பகுதியாக கொண்டு செயல்பட தொடங்கியது.

மீண்டும் இக்கழகத்தின் பேருந்துகள் எண்ணிக்கை **1097** ஆக உயர்ந்தபோது திண்டுக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு **01.04.1986** முதல் உருவாக்கப்பட்ட இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் (இந்நாளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம்) **446** பேருந்துகளுடன் மதுரை மாவட்டத்தின் ஒரு

பகுதியும், மேற்கு நோக்கிய திண்டுக்கல் – பெரியகுளம், குமுளி சாலை மற்றும் திண்டுக்கல் மாவட்ட முழுமை பகுதியும் சேவைக்கென அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு பேருந்து இயக்கங்களை முறைப்படுத்த உத்திரவிட்டபொழுது **01.04.1991–** ல் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் (இந்நாளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., காரைக்குடி மண்டலம்) அருப்புக்கோட்டை கிளை, தனது பேருந்து தடங்களுடன் இந்த போக்குவரத்துக் கழகத்திற்கு மாற்றப்பட்டவுடன் விருதுநகர் மாவட்டம் முழுமையும் இந்த கழகத்தின் சேவை ஆளுகைக்கு வந்தது.

மீண்டும் இந்த கழகத்தின் பேருந்து எண்ணிக்கை **1249** ஆனவுடன் **29.04.1997** ல் அரசு ஆணை G.O.No.**100** நாள் **29.04.1997** –ன் படி **01.05.1997** முதல் விருதுநகரை தலைமையகமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் (இந்நாளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்., விருதுநகர் மண்டலம்) **352** பேருந்துகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்பின்பு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்–1) ஆக செயல்பட்டு மதுரை மாநகர் முழுவதும் மற்றும் மதுரை மாவட்டத்தைச் சார்ந்து இயக்கத்தைக் கொண்டிருந்தது.

<u>ஒருங்கிணைந்த போக்குவரத்துக் கழகம்</u>

தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவின்படி, கடந்த **06.01.2004** முதல் மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகியவற்றை தனித்தனியே தலைமை இடங்களாகக் கொண்டு இயங்கி வந்த போக்குவரத்துக் கழகங்கள் மதுரையை தலைமையிடமாகக் கொண்டு ஒருங்கிணைந்த போக்குவரத்துக் கழகமாக உருவாக்கப்பட்டது.

இதன் போக்குவரத்து சேவைப் பகுதியாக, ஏற்கெனவே தனித்தனியாக இருந்த போக்குவரத்துக் கழகங்களின் கிளைகள் கொண்ட சேவைப் பகுதிகளான மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் ஆகும். இவைகள் போக மத்திய தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், திருச்சி, தஞ்சாவூர், இராமேஸ்வரம் மற்றும் சென்னையும் அண்டைய கேரள மாநிலத்திலும் இக்கழக பேருந்துகள் சேவை அளிக்கிறது.

இக்கழகத்தில் 31.01.2007 அன்று நகர் பேருந்துகள் 513, ஊரகப் பேருந்துகள் 1347, புறநகர் பேருந்துகள் 1455, மலைப் பேருந்துகள் 59 மற்றும் உதிரிப் பேருந்துகள் 299 ஆக மொத்தம் 3673 சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மதுரையை தலைமையிடமாகக் கொண்டு கூட்டாண்மை அலுவலகம் நிர்வாக இயக்குநர் அவர்கள் தலைமையில் இயங்கிய போதிலும், ஒருங்கிணைந்த கூட்டாண்மை அலுவலக வழிகாட்டுதலின்படி ஏற்கனவே இருந்த கழகங்கள் அதன் எல்லை வரையறைக்குட்பட்டு தனித்தனி பொது மேலாளர்கள் தலைமையில் செயல்படுகின்றன.

கூட்டாண்மை அலுவலகத்தில் கணக்கு, செயலகம், வணிகம், பொருள் கொள்முதல் துறை, நிர்வாகம் மற்றும் சட்டம் ஆகிய துறைகள் இயங்கி வருகின்றன.

<u>உள்கட்டமைப்பு வசதிகள்</u>

<u>1) கம்பியில்லாத் தொலைத் தொடர்பு வசதி</u>

அனைத்துக் கிளைகள் மற்றும் முக்கிய சிற்றூர்திகள் திறன்வாய்ந்த கம்பியில்லாத் தொலைத் தொடர்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது.

<u>2) கணிணிமயம்</u>

கூட்டாண்மை அலுவலக மின் கணிணி பிரிவில் உயர்திறன் கொண்ட XEON SERVER 25 மின் கணிணிகளுடன் NOVEL NETWARE ஆல் இணைக்கப்பட்டுள்ளது. தலைமை அலுவலக வளாகத்தில் உள்ள துறைகளான நிர்வாகம், சட்டம், பணி சீரமைப்பு, கணக்கு, பொருளகம், வணிகம் முதலிய துறைகள் மின் கணிணி பிரிவில் உள்ள MAIN SERVER உடன் இணைக்கப்பட்டு திறம்பட பயன்படுத்தும் விதமாக உள் இணைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது.

அனைத்துக் கிளைகளின் சம்பளப் பட்டியல்கள் மின் கணிணி மூலம் தயார் செய்யப்படுகிறது. இதேபோல் பெரும்பகுதியான கணக்கு சம்பந்தப்பட்ட பணிகளில் ரொக்கப் புத்தகப் பதிவு, பேரேடு தயாரிப்பு ஆகியன ஐந்தொகை கணக்கு வரை மின் கணிணி மயமாக்கப்பட்டுள்ளது. இவைகள் தவிர வாடிக்கையாளர் பேரேடு, காவலர் பயணச்சீட்டு ஆகியவையும் கணிணி மயமாக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு மின் கணிணி மூலம் காசோலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பொருளகம் சம்பந்தப்பட்ட கணக்குகளில் உடனுக்குடன் பொருள் வழங்குவது மற்றும் கொள்முதல் ஆணை தயாரித்தல் ஆகியவை மின் கணிணி மயமாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மாணவர் 100% இலவச பயணச் சீட்டுகள் மின்கணிணி மூலம் வழங்கப்படுகிறது.

தொழில்நுட்பத் துறையில் KMPL, TYRE, B.D., AND ACCIDENT ஆகியவை மின்கணிணி மூலம் விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. அனைத்து நகர் மற்றும் புறநகர் கிளைகளில் பயணப்பட்டியல் ஆய்வு நடத்தப்பட்டு அது தொடர்ந்த பட்டியல்கள் பயணச்சீட்டு சரிகட்டும் பட்டியல்கள் மின் கணிணி மூலமாக தயாரிக்கப்படுகிறது.

தலைமை அலுவலகத்துடன் இணைய தளம் மூலமாக அனைத்துக் கிளைகளும் இணைக்கப்பட்டு விவரங்கள் அங்கிருந்து தலைமையகத்திற்கு மாற்றம் செய்யப்படுகிறது. அதேபோல் இதர நான்கு மண்டலங்களிலிருந்து விவரங்கள் கூட்டாண்மை அலுவலகத்திற்கு இணைய தளம் மூலமாக பெறப்படுகிறது. இதில் பெரும்பகுதியாக கழகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டதற்குப் பின் தடங்களும் / சேவைகளும் சீரமைப்பதற்கும், தொடர்ச்சியாக மண்டல வாரியான வசூல் மற்றும் செயல்திறன் அறிக்கை, நிதி அறிக்கை மற்றும் தொழில் நுட்ப விவரங்கள் ஆகியவற்றை கண்காணிக்கவும் பயன்படுகிறது. நிர்வாக தகவல் பரிமாற்றம் தலைமை அலுவலகத்திலிருந்து போக்குவரத்துக் கழகங்களின் தலைவர் அலுவலகத்திற்கு, மின் அஞ்சல் மற்றும் இணையதளம் மூலம் நடைபெறுகிறது.

மின் கணிணி பல்வேறு பகுதிகளில் உபயோகப்படுத்தப்பட்டு துல்லியமான விவரங்களுக்கும், விரைவான செயல்பாடுகளுக்கும் நேரத்தை கணிசமாக மிச்சப்படுத்துவதற்கும் பயன்படுகிறது.

**3) மின் அஞ்சல் மற்றும் தொலை நகல்**

அனைத்து மண்டலங்களும் மற்றும் குறிப்பிட்ட கிளைகளில் மின் அஞ்சல் வசதி செய்யப்பட்டுள்ளது. அனைத்து மண்டலத் தலைமை அலுவலகத்தில் தொலை நகல் வசதி உள்ளது.

**4) மத்திய பணிமனை**

அனைத்து மண்டலங்களிலும் கீழ்க்கண்ட பணிமனைகள் இயங்குகின்றன.

1. மத்திய பணிமனை – அசெம்பிளி மற்றும் உதிரி பாகங்கள் புதுப்பித்தல்.
2. கூண்டு கட்டும் பிரிவு – புதிய பேருந்துகள் கூண்டு கட்டுமானமும், பழுதடைந்த பேருந்துகள் கூண்டு கட்டுமானமும்.
3. டயர் புதுப்பித்தல்

**கழக ஒருங்கிணைப்பிற்குப் பின் எடுக்கப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள்**

**1. இயக்க சீரமைப்பு**

ஒரே தடத்தில் இயக்கப்படும் கழகத்திலுள்ள மண்டலங்களின் பேருந்து கால நேரங்கள் ஆய்வு செய்யப்பட்டு மண்டலங்களுக்கிடையே தேவையற்ற போட்டியை தவிர்த்திடவும், வருமான இழப்பை குறைத்திடவும், அதே சமயம் பொது மக்களின் சேவைக்கு இடையூறு இன்றி பேருந்து புறப்படும் நேரங்கள் மாற்றி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

**2. கிளைகள் இணைப்பு மற்றும் மாற்றம்**

சிக்கனப்படுத்தப்பட்ட இயக்கதிற்காக தேனியில் உள்ள மதுரை மற்றும் திண்டுக்கல் மண்டலங்களின் கிளைகள் ஒரே கிளையாக மாற்றப்பட்டு திண்டுக்கல் மண்டலத்தின் கட்டுப்பாட்டில் இயக்கப்படுகிறது.

இதேபோல் திருநெல்வேலி மண்டலத்தின் மதுரை கிளை மதுரை மண்டலத்தின் கட்டுப்பாட்டிலும், கோவில்பட்டி கிளை, விருதுநகர் மண்டல கட்டுப்பாட்டிலும் மற்றும் திசையன்விளை கிளை நாகர்கோவில் மண்டல கட்டுப்பாட்டிலும் நிர்வாக மேம்பாடு வசதிக்காக கூடுதல் கவனத்துடன் இயக்கப்பட்டுவருகிறது.

**சமூக நல ஏற்பாடுகள்**

இக்கழகத்தினை சேர்ந்த மண்டலங்களின் வாயிலாக 2006 – 07 –ஆம் ஆண்டு பள்ளி செல்லும் 5,10,736 குழந்தைகளுக்கு 100% இலவச பயண வசதியும் மற்றும் கல்லூரி செல்லும் 70029 மாணவர்களுக்கு 50% சலுகைக் கட்டணத்திலும், 1/3 சலுகைக் கட்டணத்தில் பொது மக்கள் 18350 பேரும் பேருந்தில் இலவச/ சலுகை பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. பார்வையற்றோர் 2250 பேரும் உடல் ஊனமுற்றோர் 1877 பேரும் மண்டல பேருந்துகளில் அவர்கள் இருப்பிடத்திலிருந்து பணிபுரியும் இடத்திற்கு இலவச பயண அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. சுதந்திர போராட்ட வீரர்கள் 316 பேரும், அவர்தம் வாரிசுகள் 337 பேரும், மொழிப்போர் தியாகிகள் 346 பேரும், அவர்தம் வாரிசுகள் 67 பேரும் இந்த கழகத்தின் மூலம் இக்கழகப் பேருந்துகள் மட்டுமில்லாமல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இலவசமாக பயணம் செய்ய வசதிகள்

செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அரசின் உத்தரவுப்படி 50% சலுகையில் பயணம் செய்ய நாடகக் குழுவினருக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இக்கழகத்தின் மண்டலப் பேருந்துகளின் பத்திரிக்கை நிரூபர்கள் சில நிபந்தனைகளின் பேரில் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

<u>தொழிலாளர் நல ஏற்பாடுகள்</u>

கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் இக்கழகம் தொடர்ந்து தொழிலாளர்களின் நலனுக்காக பல வசதிகளை செய்து வருகிறது.

<u>அ) உணவகம்</u>

25 பேருந்துகளுக்கு மேல் உள்ள கிளைகளில், சலுகை விலையில் உணவக வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. உணவகம் இல்லாத கிளைகளில் சலுகை விலையில் உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<u>ஆ) ஓய்வறை மற்று ம் மனமகிழ்மன்றம்</u>

தொலைக்காட்சி மற்றும் இதர பொழுதுபோக்கு வசதிகளுடன் ஓய்வு அறைவசதி கொடுக்கப்பட்டுள்ளது.

<u>இ) சீருடை</u>

தொழிலாளர்களுக்கு சீருடை, காலணியும், மலைப்பகுதி பணியாளர்களுக்கு, கம்பளிச் சட்டை, போர்வை, குடை, காலணியும் மற்றும் இவர்களுக்கு தையற்கூலியும் வழங்கப்படுகிறது.

<u>ஈ) மருத்துவ வசதி</u>

அக்டோபர் **1978 –**க்கு முன் பணியில் சேர்ந்த தொழிலாளர்கள் கழக மருத்துவமனை அல்லது கழக ஒப்புதல் பெற்ற மருத்துவமனைகள் மூலமாக மருத்துவ வசதி பெறுவதற்கும், மற்றவர்கள் அரசு மருத்துவமனை மூலமாக அரசு ஊழியர்கள் பெறுவது போல் மருத்துவவசதி பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**<u>உ) இலவச பயண வசதி</u>**

இக்கழகத்தின் தொழிலாளர்கள் அவர்கள் குடும்பத்துடன் அவரவர் மண்டலப் பேருந்துகளில் வருடத்திற்கு 14 முறைகள் இலவசமாக பயணம் செய்வதற்கு அல்லது 4500 பயணிகள் கி.மீ.க்கு அனைத்து போக்குவரத்துக் கழகப்பேருந்துகளிலும் பயணம் செய்வதற்கு சம்பள ஒப்பந்தத்தில் கூறியபடி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**<u>ஊ) கூட்டுறவு சங்கங்கள்</u>**

தொழிலாளர்களின் நலனுக்காக கூட்டுறவு நாணயச் சங்கம், கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மற்றும் கூட்டுறவு பண்டகசாலை ஆகியவை செயல்படுகிறது.

**<u>எ) சிறப்பு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி</u>**

சிறப்பு ஓட்டுநர் பயிற்சி மையங்கள் மண்டல தலைமையகத்தில் ஆரம்பிக்கபட்டு, புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஓட்டுநர்களுக்கு கனரக வண்டிகள் சிறப்புடன் ஓட்டுவதற்கு பயிற்சி அளிக்கப்படுவதுடன் புதிய மாணவர்களுக்கு பயிற்சி அளித்து சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. மேலும் விபத்தினை சந்திக்கும் நிரந்தர ஓட்டுநர்களுக்கு விபத்து தடுப்பு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**<u>ஏ) புத்தாக்கப் பயிற்சி</u>**

மேலும், பயிற்சி மையம் மூலம் நல்லொழுக்க வகுப்புகள், புத்தாக்க பயிற்சிகள், யோகா பயிற்சிகள் ஆகியவைகள் மூலம் ஓட்டுநர்கள் நடத்துனர்கள் செயல்பாடுகள் முன்னேறவும் மற்றும் பயணிகளிடம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்றும் கற்பிக்கப்டுகிறது.

ஐ) தொழிற்பயிற்சிப் பள்ளி

ஒவ்வொரு மண்டலத்திலும் தொழிலாளர்கள் குழந்தைகளுக்காக தொழிற்பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டிள்ளது.

**ஓ) மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகள்**

மருத்துவம் மற்றும் பொறியியற் கல்லூரிகளில் தொழிலாளர்களின் குழந்தைகள் சேர்வதற்காக அரசு நடத்தும் பொது நுழைவுத்தேர்வு எழுதுவதற்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

**ஓ) தொழிலாளர் பாதுகாப்புத்திட்டம்**

தொழிலாளர்களின் நலனுக்காக  தொழிலாளர் பாதுகாப்புத் திட்டம்  செயல்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் பணிக்கால தொகைகளை அவர்களுக்கு கொடுக்கும்பொழுது தொழிற்சங்க தலைவர்கள் முன்னிலையில் தக்க முறையில் சிறப்பு செய்து பணியிலிருந்து ஓய்வுபெறும் நாளன்றே கொடுக்கப்படுகிறது.

**பேருந்து விபரங்கள் 31.01.2007 நிலவரப்படி**

| விபரம் | மொத்தம் |
|---|---:|
| நகர் பேருந்து | 513 |
| ஊரகம் | 1347 |
| புறநகர் | 1455 |
| மலைப்ழுகணி | 59 |
| மாற்றுப்பேருந்து | 299 |
| மொத்தம் | 3673 |

**புதிய பேருந்துகள் விபரம் 31.01.2007 நிலவரப்படி**

| விபரம் | மொத்தம் |
|---|---|
| அறிமுகப்படுத்தப்பட்டவை | 175 |
| கூண்டு கட்டுமானப் பணியில் | 66 |
| பேருந்து அடிச்சட்டம் வரவேண்டியவை | 84 |
| கூண்டு கட்டிமுடிக்கப்பட்டவை | 15 |
| மொத்தம் | 340 |
| கிளைகள் விபரம் | 61 |
| சராசரி பேருந்து வயது | 7.51 |
| பேருந்து பயன்பாடு | 431 |
| கி.மீ. செயல்திறன் | 103.16 |
| HSD KMPL | 5.08 |
| இயக்க கி.மீ/நாள் (இலட்சத்தில்) | 14.60 |
| பயணியர் பயணித்தது / நாள் (இலட்சத்தில்) | 39.24 |

**பணியாளர்கள் விபரம் 31.01.2007 நிலவரப்படி**

| விபரம் | மொத்தம் |
|---|---|
| ஓட்டுநர் | 7493 |
| நடத்துநர் | 8183 |
| போக்குவரத்து மேற்பார்வையாளர் | 155 |
| தொழில்நுட்பம் | 3429 |
| தொ.து. மேற்பார்வையாளர் | 215 |
| நிர்வாகப் பணியாளர் | 1517 |
| இதரர் | 356 |
| அலுவலர்கள் | 114 |
| பணிமனை பணியாளர்கள் | 743 |
| கண்டின்ஜண்ட் | 267 |
| மொத்தம் | **22470** |

இலவசச் சலுகைக் கட்டண பயணச்சீட்டு விபரம் ( 31.01.2007 வரை )

| விபரம் | மொத்தம் |
|---|---|
| 100% இலவச பயணச்சீட்டு | 510736 |
| 50% சலுகை பயணச்சீட்டு | 70029 |
| 1/3 சலுகை பயணச்சீட்டு | 18350 |
| பார்வையற்றோர் இலவச பயணச்சீட்டு | 2250 |
| உடல் ஊனமுற்றோர் இலவச பயணச்சீட்டு | 1877 |
| சுதந்திரப் போராட்ட தியாகிகள் இலவச பயணச்சீட்டு | 316 |
| சுதந்திர போராட்ட தியாகிகள் வாரிசு இலவச பயணச்சீட்டு | 337 |
| மொழிப்போர் தியாகிகள் இலவச பயணச்சீட்டு | 346 |
| மொழிப்போர் வாரிசுகள் இலவச பயணச்சீட்டு | 67 |

இக்கழகம் பெற்ற விருதுகள்

இக்கழகம் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளுக்கு டீசல் சராசரியில் கீழ்கண்டவாறு முதலிடம் பெற்றுள்ளது.

1) 2004 – 2005 - Fuel Efficiency award for maximum improvement in KMPL Winner in Mofussil Services by ASRTU, New Delhi.
2) 2005 – 2006 - Award for Best improvement in KMPL - Winner - By Petroleum Conservation Research Association, Delhi.